## சுருக்கம்

பணியமைப்பு–நெடுஞ்சாலைத் துறை–மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பு– அரியலூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டத்தை நிர்வாக நலன் காரணமாக பிரித்து பெரம்பலூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் ஏற்படுத்துதல்– ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்ஆர்1) துறை

அரசாணை (நிலை) எண். 141 நாள். 17.09.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044,
விஜய வருடம் புரட்டாசி மாதம் 1 ஆம் நாள்.

படிக்கவும்

1. நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கடித எண். 5049/எச்.ஆர்.1/2012–1–6, நாள். 18.04.2012, 14.05.2012, 25.09.2012, 05.11.2012, 01.02.2013 மற்றும் 14.02.2013.
2. நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கடித எண். 7767/எச்.ஆர்.1/2012–1, நாள். 08.06.2012 மற்றும் 23.07.2012.
3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை கடித எண். நிர்வாகம் 2(1)/6089/2012, நாள். 15.02.2013, 18.03.2013 மற்றும் 13.05.2013.

-----

**ஆணை:**

மேலே மூன்றில் படிக்கப்பட்ட 15.02.2013–ம் நாளிட்ட கடிதத்தில், முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை அவர்கள் கண்காணிப்புப் பொறியாளர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு, விழுப்புரம் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் அரியலூர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டம் இயங்கி வருகிறது; அக்கோட்டத்தின் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்டவாறு அரசு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாநில நெடுஞ்சாலைகள் | :- | 189.400 கி.மீ |
| 2. | மாவட்ட முக்கிய சாலைகள் | :– | 222.900 கி.மீ |
| 3. | மாவட்ட இதர சாலைகள் | :– | 918.994 கி.மீ |
| 4 | கரும்பு அபிவிருத்தி சாலைகள் | :– | 095.400 கி.மீ |
| | **மொத்தம்** | **:–** | **1426.694கி.மீ** |

அரியலூர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டம் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட 6 உட்கோட்டங்கள் மற்றும் 7 பிரிவுகள் உள்ளன.

| வ.எண். | உட்கோட்டம் | பிரிவு |
|---|---|---|
| 1. | அரியலூர் | அரியலூர் பிரிவு–1 |
| | | அரியலூர் பிரிவு–2 |
| 2. | செந்துறை | செந்துறை |
| 3. | ஜெயங்கொண்டம் | ஜெயங்கொண்டம் |
| 4. | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 5. | குன்னம் | குன்னம் |
| 6. | வேப்பந்தட்டை | வேப்பந்தட்டை |

2) இன்றைய நிலையில் பெரம்பலூர் மாவட்டத்தின் எல்லையில் உள்ள அரசு சாலைகளும், அரியலூர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டத்தினால் பராமரிக்கப்படுகின்றன. எனவே, நிர்வாக காரணங்களுக்காக அரியலூர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டத்தை பிரித்து பெரம்பலூர் தலைமையிடத்தில் புதிய கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டம் ஏற்படுத்த முதன்மை இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார். அவ்வாறு பெரம்பலூர் தலைமையிடத்தில் புதிய கோட்டம் ஏற்படுத்தும் நிலையில் அரியலூர் மற்றும் பெரம்பலூர் கோட்டங்களின் கட்டுப்பாட்டின்கீழ் பின்வருமாறு அரசு சாலைகள் பராமரிக்கப்படும் என முதன்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**உத்தேசிக்கப்பட்டுள்ள பெரம்பலூர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்ட கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும் உட்கோட்டங்கள் / பிரிவுகள் மற்றும் அரசு சாலைகளின் விவரம் :-**

| வ.எண். | உட்கோட்டம் | பிரிவு |
|---|---|---|
| 1. | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 2. | குன்னம் | குன்னம் |
| 3. | வேப்பந்தட்டை | வேப்பந்தட்டை |

<u>அரசு சாலைகளின் விவரம்</u>

| வ. எண். | சாலையின் இனம் | நீளம் (கி.மீ) ல் | | | |
|---|---|---|---|---|---|
| | | பெரம்பலூர் உட்கோட்டம் | குன்னம் உட்கோட்டம் | வேப்பந்தட்டை உட்கோட்டம் | **மொத்தம் நீளம்** |
| 1. | மாநில நெடுஞ்சாலைகள் | 38.800 | 26.000 | 16.200 | **81.000** |
| 2. | மாவட்ட முக்கிய சாலைகள் | 34.800 | 29.000 | 39.600 | **103.400** |
| 3. | மாவட்ட இதர சாலைகள் | 166.950 | 138.370 | 141.400 | **446.720** |
| 4. | கரும்பு அபிவிருத்தி திட்டச் சாலைகள் | 7.800 | 27.800 | 3.195 | **38.795** |
| | **மொத்தம்** | **248.350** | **221.170** | **200.395** | **669.915** |

3) மேலே குறிப்பிட்டுள்ளவாறு உத்தேசிக்கப்பட்டுள்ள பெரம்பலூர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்திற்கு கோட்டப் பொறியாளர் மற்றும் இதர சார்நிலைப் பணியிடங்கள் உட்பட

தேவைப்படும் மொத்தம் 20 பணியிடங்களில் விழுப்புரம் ஆய்வுக் கோட்ட அலுவலகம் 11 பணியிடங்களை கொண்டு இயங்கி வருகிறது என்றும் இவ்வாய்வு கோட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 2 உட்கோட்டங்கள் மற்றும் 4 பிரிவு அலுவலகங்கள் உள்ளன என்றும் இக்கோட்ட அலுவலகத்தின் ஒரு உதவி வரைவாளர் பணியிடத்தை அரசுக்கு ஒப்படைப்பு செய்தும் மீதமுள்ள கீழ்க்கண்ட 10 பணியிடங்களை பெரம்பலூர் புதிய கோட்டத்திற்கு மறு பணியமர்வு மூலம் வழங்குவதாக முதன்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் பணியிடங்கள்** | **மறுபணியமர்வு முறையில் பெரம்பலூர் கோட்டத்தில் பணியமர்த்தப்படும் பணியிடங்கள்** |
|---|---|
| கோட்டப் பொறியாளர் | 1 |
| இளநிலை வரை தொழில் அலுவலர் | 1 |
| உதவியாளர் | 1 |
| இளநிலை உதவியாளர் | 1 |
| தட்டச்சர்/ கணினி இயக்குபவர் | 1 |
| ஓட்டுநர் | 1 |
| பதிவுரு எழுத்தர் | 1 |
| அலுவலக உதவியாளர் | 2 |
| காவலர் | 1 |
| மொத்தம் | 10 |

4. மேலும், இவ்வாய்வு கோட்டத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த 2 உட்கோட்டம் மற்றும் 4 பிரிவு அலுவலகங்களை சென்னை ஆய்வுக் கோட்ட, கோட்டப் பொறியாளரின் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதாகவும் கீழ்க்காணும் 10 பணியிடங்கள் புதியதாக தோற்றுவித்து தருமாறும் முதன்மை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

| பதவியின் பெயர் | ஊதியம் + தரஊதியம் / எண்ணிக்கை | |
|---|---|---|
| முதுநிலை வரை தொழில் அலுவலர் | 9300–34800+5100 | 1 |
| இளநிலை வரை தொழில் அலுவலர் | 9300–34800+4200 | 2 |
| கண்காணிப்பாளர் | 9300–34800+4800 | 1 |
| கோட்டக் கணக்கர் | 9300–34800+4800 | 1 |
| உதவியாளர் | 5200–20200+2800 | 3 |
| இளநிலை உதவியாளர் | 5200–20200+2400 | 1 |
| தட்டச்சர்/ கணினி இயக்குபவர் | 5200–20200+2400 | 1 |

5. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை துறை அவர்களின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு அதனை ஏற்று கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

அ. அரியலூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தை, நிர்வாக நலன் காரணமாக பிரித்து பெரம்பலூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டம் தோற்றுவிக்கப்படுகிறது.

ஆ. கீழ்க்கண்ட உட்கோட்டம்/ பிரிவுகள் மற்றும் சாலைகளை பெரம்பலூரை தலைமையிடமாக கொண்டு செயல்படவுள்ள புதிய கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுகிறது.

| வ.எண். | உட்கோட்டங்கள் | பிரிவுகள் |
|---|---|---|
| 1. | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 2. | குன்னம் | குன்னம் |
| 3. | வேப்பந்தட்டை | வேப்பந்தட்டை |

**<u>பெரம்பலூர் கோட்ட அரசு சாலைகளின் விவரம்</u>**

| வ. எண். | சாலையின் இனம் | நீளம் (கி.மீ) ல் | | | |
|---|---|---|---|---|---|
| | | பெரம்பலூர் உட்கோட்டம் | குன்னம் உட்கோட்டம் | வேப்பந்தட்டை உட்கோட்டம் | **மொத்தம் நீளம்** |
| 1. | மாநில நெடுஞ்சாலைகள் | 38.800 | 26.000 | 16.200 | **81.000** |
| 2. | மாவட்ட முக்கிய சாலைகள் | 34.800 | 29.000 | 39.600 | **103.400** |
| 3. | மாவட்ட இதர சாலைகள் | 166.950 | 138.370 | 141.400 | **446.720** |
| 4. | கரும்பு அபிவிருத்தி திட்டச் சாலைகள் | 7.800 | 27.800 | 3.195 | **38.795** |
| | **மொத்தம்** | **248.350** | **221.170** | **200.395** | **669.915** |

இ. கீழ்க்கண்ட உட்கோட்டம்/ பிரிவுகள் மற்றும் சாலைகளை அரியலூர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுகிறது.

| வ.எண். | உட்கோட்டங்கள் | பிரிவுகள் |
|---|---|---|
| 1. | அரியலூர் | அரியலூர் பிரிவு–1 |
| | | அரியலூர் பிரிவு–2 |
| 2. | செந்துறை | செந்துறை |
| 3. | ஜெயங்கொண்டம் | ஜெயங்கொண்டம் |

## அரியலூர் கோட்ட அரசு சாலைகளின் விவரம்

| வ. எண் | சாலையின் இனம் | நீளம் (கி.மீல்) | | | |
|---|---|---|---|---|---|
| | | அரியலூர் உட்கோட்டம் | செந்துறை உட்கோட்டம் | ஜெயம்கொண்டம் உட்கோட்டம் | மொத்தம் நீளம் |
| 1. | மாநில நெடுஞ்சாலைகள் | 28.800 | 30.200 | 49.400 | **108.400** |
| 2. | மாவட்ட முக்கிய சாலைகள் | 22.600 | 51.100 | 45.800 | **119.500** |
| 3. | மாவட்ட இதர சாலைகள் | 178.874 | 178.900 | 114.500 | **472.274** |
| 4. | கரும்பு அபிவிருத்தி திட்டச் சாலைகள் | 33.005 | 21.800 | 1.800 | **56.605** |
| | **மொத்தம்** | **263.279** | **282.000** | **211.500** | **756.779** |

ஈ. பெரம்பலூர் கோட்டத்திற்கு விழுப்புரம் ஆய்வுக் கோட்டப் பணியிடத்தினை கலைத்து மறுபணியமர்வு முறையில் 10 பணியிடங்களும் மற்றும் 10 புதிய பணியிடங்கள் தோற்றுவித்தும் கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் ஒப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் கோட்ட அலுவலக பணியிடங்கள் விவரம்** | **ஊதியம் + தரஊதியம்** | **மறுபணியமர்வு முறையில் பெரம்பலூர் கோட்டத்தில் பணியமர்த்தப்படும் பணியிடங்கள்** | **புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள்** |
|---|---|---|---|---|
| 1 | கோட்டப் பொறியாளர் | ரூ.15600–39100+6600 | 1 | 0 |
| 2 | முதுநிலை வரை தொழில் அலுவலர் | ரூ.9300–34800+5100 | 0 | 1 |
| 3 | இளநிலை வரை தொழில் அலுவலர் | ரூ.9300–34800+4200 | 1 | 2 |
| 4 | கோட்டக் கணக்கர் | ரூ.9300–34800+4800 | 0 | 1 |
| 5 | கண்காணிப்பாளர் | ரூ.9300–34800+4800 | 0 | 1 |
| 6 | உதவியாளர் | ரூ.5200–20200+2800 | 1 | 3 |
| 7 | இளநிலை உதவியாளர் | ரூ.5200–20200+2400 | 1 | 1 |
| 8 | தட்டச்சர்/ கணினி இயக்குபவர் | ரூ.5200–20200+2400 | 1 | 1 |
| 9 | ஓட்டுநர் | ரூ.5200–20200+2400 | 1 | 0 |
| 10 | பதிவுரு எழுத்தர் | ரூ.4800–10000+1400 | 1 | 0 |
| 11 | அலுவலக உதவியாளர் | ரூ.4800–10000+1300 | 2 | 0 |
| 12 | காவலர் | ரூ.4800–10000+1300 | 1 | 0 |
| | மொத்தம் | | 10 | 10 |

உ. பெரம்பலூர் கோட்ட அலுவலகம் மற்றும் கோட்டப் பொறியாளர் இல்லத்திற்கு தொலைபேசி இணைப்புக்கான அனுமதி [அலுவலக தொலைபேசி ரூ.1000 X 12 = ரூ.12000 (ஆண்டுக்கு) இல்ல தொலைபேசி ரூ.1000 X 12 = ரூ.12000 (ஆண்டுக்கு)] வழங்கலாம்.

ஊ. பெரம்பலூர் கோட்ட அலுவலக எதிர்பாரா அலுவலக செலவுகளுக்காக நிலையான முன்பணம் ரூ.1000 வழங்கலாம்.

எ. கோட்ட அலுவலகத்திற்கு தேவைப்படும் படிவங்கள், எழுதுபொருட்கள், பதிவேடுகளை எழுதுபொருள் மற்றும் அச்சக துறையிலிருந்து பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கலாம்.

ஏ. கோட்ட அலுவலகத்திற்கான வாடகை மாதம் ரூ.15,000 /–வீதம் 1 ஆண்டுக்கு ரூ.1,80,000/– (தோராயமாக) அனுமதி வழங்கலாம்.

7. விழுப்புரம் ஆய்வுக் கோட்டம் கட்டுப்பாட்டிலிருந்த உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகங்களின் நிர்வாக கட்டுப்பாடு மாற்றம் மற்றும் உரிய கருவூலத்திற்கு தெரியப்படுத்துதல் ஆகியன குறித்து முதன்மை இயக்குநர் அவர்கள் உரிய ஆணைகள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5–இல் மறுபணியமர்வு மற்றும் புதிதாக தோற்றுவிக்கப்படும் புதிய பணியிட பணியாளர்களின் ஊதியம், அகவிலைப்படி, வீட்டுவாடகைப்படி மற்றும் இதர படிகள் ஆகியவற்றிற்கான செலவினம் மற்றும் தொலைபேசிக் கட்டணம் சில்லரை செலவினம், வாடகை ஆகிய செலவினங்கள் கீழ்க்காணும் தலைப்பின் கீழ் உள்ள துணை கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் மேலும் 2013–14 ஆம் ஆண்டிற்கு இக்கணக்குத் தலைப்பில் போதுமான நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

> "3054 – சாலைகளும், பாலங்களும் – 80–பொது–001
> நெறிப்படுத்துதலும் நிருவாகமும்–I- திட்டத்தில் சேராதது–
> AE. நிருவாக பணியாளரமைப்பு (பொது) நெடுஞ்சாலை
> (து.தொ.கு 3054–80–001–AE–0004)"

9. புதிய அலுவலகத்திற்கு கணினி மற்றும் அச்சுப் பொறி கொள்முதல் செய்வது குறித்து நெடுஞ்சாலைத் துறையின் தகவல் தொழில் நுட்ப பிரிவின் குறிப்பினைப் பெற்று 2014–15–ஆம் ஆண்டுகளுக்கான பகுதி–2 திட்டத்தில் கருத்துரு சமர்ப்பித்து தனியே பெற்றுக்கொள்ளுமாறும் முதன்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. பெரம்பலூர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள உட்கோட்டங்கள்/பிரிவு அலுவலகங்களின் பணியாளர்களின் ஊதியம் தொடர்பாக அனுப்பப்படும் ஊதிய பட்டியல்கள் இதர வகையில் சரியாக இருந்தால் அவற்றை

சரிபார்த்து அனுமதிக்குமாறும், உரிய சம்பளம் வழங்கும் அலுவலர் குறியீட்டுடன் (D.O.Code) வழங்குமாறும், தமிழ்நாடு கருவூலத் தொகுப்பு 70 குறித்த பதிவேட்டினை வழங்குமாறும் (Supply the book of T.N.T. Code 70) கருவூல அலுவலர், பெரம்பலூர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு.எண். 50708/CMPC/13, நாள். 17.09.2013–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (நெ), திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, சென்னை–32.
தலைமைப் பொறியாளர் (தரஉறுதி மற்றும் ஆராய்ச்சி), சென்னை–25.
தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), சென்னை–16.
தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்), சென்னை–32.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், சென்னை–20.
தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), சென்னை–15.
தலைமைப் பொறியாளர் (தே.நெ), சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
கருவூல அலுவலகம், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர்.
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை–2.

நகல்
நிதி (பொ.ப.I) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.